

## தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தை

# வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்

## செலவை ஏற்றுக்கொள்கிறோம்

### நில உரிமை நிறுவனம் அறிவிப்பு

பி.மலையாண்டி - எல்.கே.ராஜ்

கோலாலம்பூர், மார்ச் 21-
ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் இந்து ஆலயம் அமைந்திருக்கும் நிலத்தின் உரிமையாளர் அந்த ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்றிச் செல்வதற்கான செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள இணக்கம் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு மேல் சம்பந்தப்பட்ட அந்த ஆலயத்தின் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்திருக்கிறது என்று ஜேக்கெல் டிரேடிங் சென்டிரியான் பெர்ஹாட் நிறுவனத்தின்

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ....

சட்ட வர்த்தகத் தொடர்பு பிரிவு தலைவர் ஐமான் டசுக்கி நேற்று தெரிவித்தார்.

கொஞ்சம் உதவியுடன் ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செலவுக்கு பணம் கொடுக்க நாங்கள் தயார் என்று ஐமான் நேற்று கொன்கோர்ட் ஹோட்டலில் நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டு வாக்கில் இந்த நிலத்தை மீண்டும் நாங்கள் பெற்ற பிறகு ஆலய நிர்வாகத்திற்கும் ஜேக்கெல் டிரேடிங் நிறுவனத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமுகமாகத்தான் இருந்தது என்று அவர் கூறினார்.

எந்த நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டு தரப்பினருக்கும் சாதகமான முறையில் தீர்வுகாண முடியும் என்று நாங்கள் கருதினோம் என்று அவர் குறிப்பிட்டார்.

அந்த இடத்தில் பள்ளிவாசலை நிர்மாணிக்கும் திட்டத்திற்கு அரசாங்கமும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் அங்கீகாரம் அளித்திருப்பதால் அந்த ஆலயம் உடைபடும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கிறது என்று இணைய ஊடக செய்தி கூறியது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஜேக்கெல் மால் அருகே அமைந்துள்ள தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் கிட்டத்தட்ட 130 ஆண்டுகளுக்கு முன்பு எழுப்பப்பட்ட ஆலயமாகும்.

அந்த இடத்தில் ஒரு பள்ளிவாசலை நிர்மாணிக்க அந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. இந்தப் பள்ளிவாசலுக்கு மஸ்ஜிட் மடானி என பெயர் வைக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்ற ஒரு பொருத்தமான இடம் வேண்டும் என ஆலய நிர்வாகம் கோரியிருந்ததாகவும் ஆனால் அந்த கோரிக்கை வெற்றிபெறவில்லை எனவும் நேற்று செய்தி வெளியானது.

இதற்கிடையே, பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா மார்ச் 28ஆம் தேதி நடைபெறும் என ஐமான் கூறினார். ஏனெனில் நோன்பு மாதத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற வேண்டுமென நிர்வாகத் தரப்பு விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், ஆலயத்திற்கு முன்புறமாக அடிக்கல் நாட்டுவிழா நடைபெறாது என்றார் அவர்.

ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்றாமல் அங்கு பள்ளிவாசலை நிர்மாணிப்பது சாத்தியமில்லை. ஏனெனில், சுமார் 12 ஆயிரம் சதுர அடி நிலம் அதற்குப் போதுமானதாக இல்லை என்றும் ஐமான் கூறினார்.

இதற்கிடையே, இரண்டு தரப்பினரும் இந்த பிரச்சினைக்கு நல்ல முறையில் தீர்வு காண வேண்டும் என்று ஜேக்கெல் குரூப் நிதி தலைமை அதிகாரி சைட் நஸ்ருல் ஃபாமி சைட் அல் - கட்ரி தெரிவித்தார்.

ஆகவே, ஊடகங்களும் மற்ற வெளித் தரப்பினரும் இந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு நிறுவனத் தரப்பிற்கும் டிபிகேஎல் தரப்பிற்கும் ஆலயத் தரப்பிற்கும் வாய்ப்பும் கால அவகாசமும் வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்றும் பணிகளை நாங்கள் மிக உயர்வாக மதிக்கிறோம் என்றும் அவர் சொன்னார்.